1972 டிசம்பர் 15]

ராயபுரம்–தண்டையார்பேட்டை கரைப்பகுதியில் கடலரிப்பு

* 202 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

சென்னை ராயபுரம்–தண்டையார்பேட்டைப் பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ராயபுரம்–தண்டை யார்பேட்டை கடற்கரைப் பகுதியில் 3,500 அடி நீளமுள்ள சுவர் ஒன்று ரூ. 18,36,450 மதிப்பீட்டில் 7 கட்டங்களில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டு 1, 2, 3, 7 கட்டங்களில் மட்டும் சுவர் எழுப்பப் பட்டு இதற்கிடையே எஞ்சியுள்ள 4, 5, 6 கட்டங்களில் சுவர் எழுப்பும் வேலை மீன்பிடி துறைமுகம் கட்டும் திட்டம் அமல் செய்யப் படவிருக்கும் காரணத்தால் கைவிடப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னை ராயபுரம், தண்டையார்பேட்டை போன்ற பகுதிகளில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன் வந்துள்ளது. இதுபோன்ற கடல் அரிப்புள்ள இடங் களிலும் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அரசு ஆலோசித்து வருகிறதா என்பதையும், அப்படித் தடுப்புச் சுவர்களைக் கட்டுவதற்கு நமது மாநில அரசுக்கு மத்திய அரசு ஏதேனும் உதவி செய்கிறதா என்பதை யும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றிய விவரம் இல்லை. அரிப்பு ஏற்படும்போது இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தை நீடித்துக்கொள்கிறேன்.

பரப்பலாறு நீர்த்தேக்கம்

* 203 வின.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரப்பலாறு நீர்த்தேக்கக் கொள் அளவை கூடுதலாக்கும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?